Reg. No. : ....................................

Name : .......................................

**SY 12**

**MARCH 2019**

Time : 2 ½ Hours
Cool-off time : 15 Minutes

Part – II

# TAMIL

Maximum : 80 Scores

***General Instructions to Candidates :***

- There is a 'Cool-off time' of 15 minutes in addition to the writing time.
- Use the 'Cool-off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- Read the instructions carefully.
- Calculations, figures and graphs should be shown in the answer sheet itself.
- Give equations wherever necessary.
- Electronic devices except non-programmable calculators are not allowed in the Examination Hall.

**1 முதல் 3 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக. மதிப்பெண் ஒன்று வீதம்** **(3 × 1 = 3)**

1. "இம்மை மாறி மறுமை யாயினும்
நீயாகியர் என் கணவனை
யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே"
-இப் பாடல் வரிகள் இடம் பெறும் நூல்
(அ) அகநானூறு (ஆ) புறநானூறு
(இ) கலித்தொகை (ஈ) குறுந்தொகை

2. 'காது குத்துதல்' என்ற மரபுத் தொடரின் சரியான பொருள் எழுதுக.
(அ) கோபப்படுதல் (ஆ) ஏமாற்றுதல்
(இ) விரும்புதல் (ஈ) பயிற்றுவித்தல்

3. கீழே தரப்பட்டுள்ளவற்றுள் 'கதிர்' என்பதன் இரு பொருள்
(அ) வானம், வைக்கோல் (ஆ) சூரியன், நெற்கதிர்
(இ) சந்திரன், வையம் (ஈ) கடல், விண்

**4 முதல் 7 வரையுள்ள அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக. மதிப்பெண் மூன்று வீதம்** **(4 ×3 = 12)**

4. “போர் வீரர்களைவிட உழவர்களான ஏர் வீரர்களே சிறந்தவர்கள்” இக் கூற்றுடன் உடன்படுகிறீர்களா? ஏன்? விளக்குக.

5. உங்கள் பள்ளி இலக்கிய மலரில் வெளியிடுவதற்காக “விழாக்களின் சிறப்புகள்” என்ற தலைப்பில் பெட்டிச் செய்தி தயார் செய்க.

6. “இருட்டறையில் உள்ளதடா” என்ற கவிதையில் பேசப்படும் சமூக ஏற்றத்தாழ்வுகளைக் குறிப்பிடுக.

“சுருட்டுகின்றார் தம் கையில் கிடைத்தவற்றைச்
சொத்தெல்லாம் தமக்கென்று சொல்வார் தம்மை
வெருட்டுவது பகுத்தறிவே இல்லையாயின்
விடுதலையும் கெடுதலையும் ஒன்றேயாகும்”
-பாரதிதாசன்

7. கீழ்வரும் பாடல்களைப் படித்து ஒப்பீட்டுக் குறிப்பு தயார் செய்க.

“திருமகளும் கலைமகளும் சிறக்க வேண்டும்
தேசாபிமானமெங்கும் திகழ வேண்டும்
கருமமெல்லாம் நறகரும மாக வேண்டும்”
-கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

“வேற்றுமையால் விளைகின்ற தீமை தன்னை
விரைவில் நாம் வேரோடு சாய்க்க வேண்டும்”
-சுரதா

**8 முதல் 11 வரை அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. மதிப்பெண் நான்கு வீதம்.** **(4×4 = 16)**

8. “நம்ம நிலம்
வலிகளையும் பொறுத்துக் கொண்டு
ஊமையாய் அழுது கொண்டிருக்கிறது
நாம்
நம்ம நாட்டு விதைகளைத்
தேடித் தேடித்
கண்டு பிடிக்க வேண்டும்
நம்ம பாட்டன் காலத்து விவசாயத்தை
நாம் பழுது பார்த்து
செழுமைப் படுத்த வேண்டும்”
–இக் கவிதை வரிகளை விமர்சனம் செய்க.

9. நலிவடைந்து வரும் கூத்துக் கலையை மீட்கும் பொருட்டு நீங்கள் முன் வைக்கும் கருத்துக்களை வரிசைப்படுத்துக.

10. வளரும் உலகில் அறிவியல் சார்ந்த பிறமொழி நூல்களை தமிழாக்கம் செய்ய வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக் காட்டி "வளர் தமிழ்" என்ற தலைப்பில் பெட்டிச் செய்தி தயார் செய்க.

11. உலக ஆரோக்கிய தினத்தை முன்னிட்டு உங்கள் பள்ளியில் "விரைவு உணவகங்கள் (Fast Food) மனித உடலுக்கு ஊட்டம் அளிக்கிறது/உடல் நலம் கெடுகிறது என்னும் தலைப்பில் வகுப்பில் நடைபெறும் பட்டி மன்றத்தில் ஏதேனும் ஓர் அணியில் பேசிட குறிப்புகள் தயார் செய்க.

**12 முதல் 15 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. மதிப்பெண் ஐந்து வீதம். (3×5 = 15)**

12. அறிவியல் தின நாளையொட்டி உங்கள் பள்ளியில் "சமூகமும் இணைய வலைத்தளங்களும்" என்ற தலைப்பில் நடைபெறும் பேச்சுப் போட்டியில் பங்கேற்க ஒரு சொற்பொழிவு உரை தயார் செய்க.

13. "நெடுநல்வாடையில் கூதிர்காலம்" என்ற தலைப்பில் சிறு கட்டுரை எழுதுக.

14. "இலக்கியங்களில் மேலோங்கி நிற்பது அறிவியல் உண்மையே" என்னும் தலைப்பில் விவாதக் குறிப்பு தயாரிக்கவும்.

15. கீழ்வரும் பாடலைப் படித்து நயம் பாராட்டுக.
"மாலையில் விளையாடும் வழக்கம் தன்னை
மாணவர்கள் கடைப்பிடிப்பாராயின் – என்றும்
ஓலையிலே எழுதிவைத்த எழுத்தாகாமல்
உடல் நலமோ கல்லெழுத்தால் நிலைத்து நிற்கும்
சாலையிலே தனிவழியே போவோருக்குச்
சரியான உடல் வன்மை வேண்டும்"

**16 முதல் 19 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. மதிப்பெண் ஆறு வீதம். (3×6= 18)**

16. 'உடம்பு' என்ற பாடப் பகுதியை எழுதிய பேராசிரியர் முனைவர் கி. நாச்சிமுத்து அவர்கள் உங்கள் பள்ளிக்கு விளையாட்டுப் போட்டியைத் துவக்கி வைக்க வருகின்றார் . அவருக்கு ஒரு பாராட்டுரை எழுதுக.

17. குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவது தண்டனைக்குரிய செயலாகும். இதை வலியுறுத்தி "குழந்தைத் தொழிலும் – தண்டனைகளும்" என்னும் தலைப்பில் பத்திரிகைக்குத் தலையங்கம் எழுதுக.

18. இன்றைய சமுதாய நிலையையும், ஏற்றத்தாழ்வற்ற சமுதாயம் உருவாக நீங்கள் கூறும் ஆலோசனைகளையும் வரிசைப்படுத்தி "எதிர்கால சமுதாயம்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

19. நாட்டுப்புற விளையாட்டுகளின் தனித்தன்மைகளை எழுதி, ஏதேனும் ஒரு விளையாட்டினை விளக்குக.

**20 முதல் 22 வரையுள்ள வினாக்களில் எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. எட்டு மதிப்பெண் வீதம். (2×8= 16)**

20. பொங்கல் திருநாளையொட்டி உங்கள் பள்ளியில் "உழவர் திருநாள்" என்ற தலைப்பில் நடைபெறும் கருத்தரங்கில் வாசிப்பதற்காக "இயற்கை விவசாயத்தின் மேன்மைகள்" என்ற தலைப்பில் கட்டுரை தயார் செய்க.

21. கேரள நாட்டுப்புறவியல் துறை " நாட்டார் பண்பா ட்டுக் கூறுகள்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரைப் போட்டி நடத்த தீர்மானித்துள்ளது. இதில் பங்கேற்க "வாய்மொழி இலக்கியத்தில் பண்பாட்டுக் கூறுகள்" என்ற தலைப்பில் கட்டுரை தயார் செய்க.

குறிப்புக்கள் :

★ நாட்டுப்புறப் பாடல்கள்

★ வாய்மொழிப் பாடல்கள்

★ தாலாட்டு

★ பிள்ளைப்பேறு

★ காதல்

★ தெய்வ வணக்கம்

22. உலக யோகா தினத்தை முன்னிட்டு உங்கள் பள்ளியில் இருந்து வெளிவரவிருக்கும் ஆரோக்கிய மலரில் வெளியிட "யோகாவும் – உடல் நலமும்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.